# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 106 /பேரூ/2026**
**நாள் : 28.07 .2026**

K. ஸ்ரீராமன்,
மேற்கு தாம்பரம்,
சென்னை . – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம். – எதிர் மனுதாரர்

சென்னை –45, மேற்கு தாம்பரம், எண். 15/41, பழைய ஸ்டேட் வங்கி காலனி, 2வது தெரு என்ற முகவரியில் செயல்படும் M/s. கிரீன் சர்வீசஸ் டிரஸ்ட் நிறுவனத்தின் சார்பாக திரு. K. ஸ்ரீராமன் என்பவரது 08.04.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.04.2026 அன்று பெறப்பட்டு, 106/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை –45, மேற்கு தாம்பரம், எண். 15/41, பழைய ஸ்டேட் வங்கி காலனி, 2வது தெரு என்ற முகவரியில் செயல்படும் M/s. கிரீன் சர்வீசஸ் டிரஸ்ட் என்ற நிறுவனத்தின் சார்பாக திரு. K. ஸ்ரீராமன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 08.04.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

The present complaint is filed to direct the Respondent to pay the outstanding due of Rs.12,70,248/-, Earnest Money Deposit (EMD) of Rs.32,320/- to the Complainant pertaining to Work Order (Roc. No.A4/427/2021 dated 07.12.2022.

The brief disputes is as follows:

The Complainant was issued Work Order (Roc.No.A4/427/2021 dated 07.12.2022) for the removal of 4,520 cubic meter of the legacy waste dumped in the Koogaiyur Road Dumpsite by bio-mining process by the Respondent based on the Administrative Sanction accorded by the Directorate of Town Panchayat, Government of Tamil Nadu.

The estimated project value was Rs.32,32,000/- (Rupees Thirty two lakhs thirty two thousand only)

After issuance of work order, the Complainant successfully completed the project within the stipulated time period, i.e., from 17.03.2023 – 28.12.2023. This was confirmed by the letter dated 12.01.2024 sent by the Executive officer of Chinnasalem to Anna University calling them for inspection

The Respondent engaged the Centre for Environmental Studies (CES), Anna University, Chennai as Project Management Consultant to assess the progress of work by periodic site visits, volume measurements, observations at the site and review of records

Upon successful completion of the project, the CES team filed project completion report in January, 2024

It was explicitly recorded in the report that "The site inspection by CES team on 13 January 2024 along with the representatives from Chinnasalem Town Panchayat and Concessionaire indicated that the total quantity of the DPR has been completely processed and recovered fractions were disposed. Hence, 4520 cubic meter is considered to be processed and disposed from Chinnasalem Town Panchayat and the same is recommended for the payment. Therefore, the payment can be released for 4,520 cubic meter. This is about 100% of the total DPR volume (4520 Cubic Meter) processed and disposed by M/s Green services Trust. Chinnasalem Town Panchayat shall issue the completion certificate to M/s Green Services Trust".

Despite the successful completion of the assigned project, the complainant was only paid Rs. 19,61,752) (Rupees Nineteen Lakhs Sixty One Thosuand Seven Hundred Fifty Two only). The balance of "Rs.12,70,248/- (Rupees Twelve Lakhs Seventy Thousand Two Hundred Forty Eight only) has not been despite the lapse of nearly two years since the completion of the project.

Upon requesting the Respondent, the Complainant was informed vide letter dated 04.04.2024 that only funds for processing of 3616 cubic meter of waste have been granted to them and for the remaining 904 cubic meter they are not aware of the source from which funds have to be released.

The Complainant submits that such a reasoning is arbitrary and unlawful, since the tender and subsequent work order and completion certificate issued to us was for the value of Rs.32,32,000/-. Our work was performed for the said value as well. Therefore, we are rightfully entitled to the entire amount of Rs.32,32,000/- as admitted by the Executive Officer in his letter dated 04.04.2024.

The Complainant sent letters dated 08.04.2024 and 19.12.2024 to the Executive Officer of Chinnasalem and to Directorate of Municipal Administration strongly objecting to the withholding of the balance payment and requesting them to release the same.

It is disappointing that despite the Complainant's timely submission of all relevant bills, no concrete action has been taken to release the payment due. This ongoing delay has caused undue financial strain on the Complainant's operations. The Complainant submits that they are ready to submit the entire documentary evidence as and when directed by this Hon'ble Authority.

Since the Complainant has also completed their work, the Earnest Money Deposit and the Security Deposit (paid at the time of commencement of work by Complainant) and any such deductions made by the Respondent during the course of work ought to be released to the Complainant along with the outstanding due.

Hence, the present complaint is to release the pending payment to the Complainant which is as follows:

Outstanding due for services rendered Rs. 12,70,248/-, EMD Rs.32,320 and Security Deposit (To be verified from the records of Respondent) along with the accrued interest @ 12% p.a. from the due date till the date of payment to the Complainant.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 28.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.05.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 427/2021/அ4-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

“கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் இயக்கம் 2.0 – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2022-23ன் கீழ் ரூ.32,32,000/- மதிப்பீட்டில் சின்னசேலம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட கூகையூர் ரோடு குப்பை கிடங்கில் தேங்கிய பழமையான கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் (BIO – MINING) குப்பைகளை கனமீட்டர் 1க்கு ரூ.690.78 என்ற அளவில் நிர்ணயம் செய்து அப்புறப்படுத்துதல் பணிக்கு பேரூராட்சிகளின் இயக்குநரின் 24.07.2022 நாளிட்ட செயல்முறைகள் ந.க. எண்.6814/2021/அ4ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 10.08.2022 நாளிட்ட கடித ந.க. எண். 2413/2022/பேரூ.1ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, இப்பேரூராட்சி அலுவலக அறிவிப்பு ந.க. எண். 427/2021/உ4 நாள் 16.08.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராத நிலையில் பேரூராட்சி அலுவலக அறிவிப்புகள் ந.க. எண். 427/2021/அ4 நாள் 07.09.2022ல் தேதியன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட போதும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. எனவே மீண்டும் 30.09.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 19.10.2022ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய கிரீன் சர்வீசஸ் டிரஸ்ட், மேற்கு தாம்பரம், சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தமானது இறுதி செய்யப்பட்டு இப்பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள் ந.க.எண். 427/2021/உ4 நாள் 07.12.2022ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6814/2021/அ4 நாள் 18.10.2022ல் திருத்தியமைக்கப்பட்ட நிர்வாக அனுமதி உத்தரவில் கன மீட்டர் 1க்கு ரூ.690.78 என்பதை திருத்தியமைத்து மெட்ரிக் டன் 1க்கு ரூ.550-/ என நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி உத்திரவு 22.10.2022ல் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்றது.

மேற்படி திட்டப் பணியினை 27.07.2022 நாளிட்ட நிர்வாக அனுமதியில் தெரிவிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.32.32 இலட்சம் அடிப்படையில் பொறியாளர்களால் அளவு புத்தகம் (M Book) இறுதி செய்யப்பட்டு 09.02.2024ஆம் தேதியில் பணி முடிவு பட்டியல் (Work Completion Bill) இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது. இந்நிலையில் ஏற்கனவே வழங்கிய 27.07.2022ல் நிர்வாக அனுமதியில் தெரிவிக்கப்பட்ட ரூ.32.32 இலட்சம் மதிப்பீட்டு தொகைக்கு ரூ.19.89 இலட்சம் என திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான தொகையான ரூ.19.89 இலட்சம் மட்டுமே அரசிடம் இருந்து விடுவிக்கப்பட்டது. இத்தொகையினை 04.04.2024 அன்று ரூ.11,53,504/-ம், 2ஆம் தவணையாக ரூ.3,38,096/-ம், 22.11.2024 அன்று ரூ.4,97,200/-ம் ஆக மொத்தம் மூன்று தவணைகளாக தொகை ரு.19,88,800/-ஐ சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு முழுவதுமாக வழங்கப்பட்டது.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மீதி தொகை வழங்கக் கோரிய போது அரசு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான முழுத் தொகையும் பெறப்பட்டு அத்தொகையினை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் கோரும் தொகை வழங்குவது குறித்து வேறு எந்தவித உத்திரவுகளும் இல்லாத நிலையில் மேற்படி தொகை வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது என்ற தகவல் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்ற விபரத்தை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 23.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராகுமாறு 15.06.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. K. ஸ்ரீராமன் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 23.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சியில் 2021-22ஆம் ஆண்டு தூய்மை இந்தியா 2.0 திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2021-22ன் கீழ் பேரூராட்சிக்குட்பட்ட கூகையூர் ரோடு குப்பை கிடங்கில் தேங்கிய பழமையான கழிவுகளை ரூ.32.32 இலட்சம் மதிப்பீட்டில் உயிரி அகழ்வு முறையில் (Bio-Mining) அகற்றிட பேரூராட்சியால் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், குறைந்த மதிப்பீட்டில் வழங்கிய எங்களது Green Services Trust, Chennai நிறுவன ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, 4,520 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட குப்பை கழிவுகளை ரூ.32.32 இலட்சம் மதிப்பீட்டில் அகற்றிட 07.12.2022 அன்று பேரூராட்சி செயல் அலுவலரால் பணி உத்தரவு வழங்கப்பட்டது.
- பேரூராட்சி செயல் அலுவலரின் பணி ஆணையின்படி, எங்களது நிறுவனம் மூலம் 4520 கன மீட்டர் குப்பை கழிவுகள் முழுவதும் 17.03.2023 முதல் 28.12.2023 வரை காலத்தில் அகற்றப்பட்டது.
- சென்னை, அண்ணா பல்கலைக்கழக சுற்றுச்சூழல் துறையின் மூலம் எங்களது நிறுவனம் மூலம் குப்பை கழிவுகளை அகற்றப்பட்ட பணியினை ஆய்வு செய்யப்பட்டு, பணி 100 சதவீதம் முடிக்கப்பட்டதை உறுதி செய்து, அதற்கான தொகையினை மேற்காணும் நிறுவனத்திற்கு வழங்கப்படலாம் என பரிந்துரை செய்துள்ளது.
- பேரூராட்சி செயல் அலுவலரின் பணி ஆணைப்படி ரூ.32,32,000 செலவினத்தில் குப்பை கழிவுகள் அகற்றியதற்கான பட்டியல் தொகை வழங்க கோரப்பட்டதில் ரூ.19,61,752 தொகை மட்டுமே பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ளது.
- ஆனால் எங்களுக்கு வழங்க வேண்டிய மீதத் தொகையான ரூ.12,70,248 டேவணித் தொகை (EMD) ரூ.32,320 மற்றும் பாதுகாப்பு வைப்பு தொகை (Security Deposit) ஆகியவை கடந்த 2 ஆண்டுகளாக வழங்கப்படாமல், பேரூராட்சியினர் நிலுவையில் வைத்துள்ளனர்.
- எனவே மேற்காணும் நிலுவை தொகையினை 12% வட்டியுடன் எங்கள் நிறுவனத்திற்கு உடனடியாக வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 23.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- ➢ சென்னை பேரூராட்சிகளின் ஆணையரின் 27.07.2022 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2021-22ன் கீழ் பேரூராட்சிக்குட்பட்ட கூகையூர் ரோடு குப்பை கிடங்கில் தேங்கிய பழமையான 4520 கன மீட்டர் குப்பை கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் (Bio-mining) மூலம் குப்பைகளை அப்புறப்படுத்திட கன மீட்டர் 1க்கு ரூ.690.78 வீதம் 4520 கன மீட்டர் குப்பைகளுக்கு மொத்தம் ரூ. 32,32,000 தொகைக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 10.08.2022 அன்று கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது.

- ➢ இதனை தொடர்ந்து அன்றைய செயல் அலுவலரால் 16.08.2022, 07.09.2022 ஆகிய நாளிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் எவரும் ஒப்பந்தப்புள்ளி கோர முன் வராததால் இறுதியாக 30.09.2022 அன்று கோரப்பட்டு, 19.10.2022ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Green Services Trust, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தமானது இறுதி செய்யப்பட்டது.

- ➢ இதற்கிடையில் 18.10.2022 நாளிட்ட பேரூராட்சிகளின் ஆணையரின் செயல்முறைகள் ஆணையில் ஏற்கனவே 27.07.2022ல் வெளியிடப்பட்ட நிர்வாக அனுமதி ஆணையில் சின்னசேலம் பேரூராட்சியில் கழிவுகளை அகற்றிட கன மீட்டர் ஒன்றிற்கு ரூ.690.78 வீதம் 4520 கன மீட்டருக்கு மொத்தம் ரூ.32,32,000 நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதற்கு பதிலாக மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.550 வீதம் 3616 மெட்ரிக் டன்னுக்கு மொத்தம் ரூ.19,89,000 தொகைக்கு திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.

- ➢ இந்நிலையில் பேரூராட்சிகளின் ஆணையரால் 18.10.2022 நாளிட்ட திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதற்கு முன்னர் 27.07.2022ல் வெளியிடப்பட்ட நிர்வாக ஆணையின் அடிப்படையில் 4520 கன மீட்டர் குப்பை கழிவுகளை ரூ.32.32 இலட்சம் மதிப்பீட்டில் அகற்றிட அப்போதைய சின்னசேலம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.12.2022 நாளிட்ட பணி உத்தரவு ஆணையில் Green Services Trust, Chennai என்ற நிறுவனத்திற்கு பணி மேற்கொள்ள ஆணையிடப்பட்டது.

- ➢ பேரூராட்சிகளின் ஆணையரின் 18.10.2022 நாளிட்ட திருத்திய நிர்வாக செயல்முறைகள் அடிப்படையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோராமல், 27.07.2022ல் வெளியிடப்பட்ட பேரூராட்சிகளின் ஆணையரின் செயல்முறைகளின்படி ரூ.32.32 இலட்சத்திற்கு பணி உத்தரவு 2 மாதங்கள் கழித்து 07.12.2022 அன்று மேற்காணும் நிறுவனத்திற்கு அன்றைய பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்டது தவறான செயலாகும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

- ➢ மேற்காணும் நிறுவனத்தால் ரூ.32.32 இலட்சம் செலவினத்தில் பணிகள் முடிக்கப்பட்டு, மேற்காணும் நிறுவனம் மூலம் 09.02.2024 அன்று பணி முடிவு பட்டியல் பெறப்பட்டது.

- ➢ ஆனால் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ரூ.19.89 இலட்சம் மட்டுமே விடுவிக்கப்பட்ட நிலையில், மேற்காணும் நிறுவனத்திற்கு 04.04.2024 அன்று ரூ.11,53,504, 12.06.2024ல் ரூ.3,38,096 மற்றும் 22.11.2024 அன்று ரூ.4,97,200 என ஆக மொத்தம் ரூ.19,88,800 ஒப்பந்ததாரருக்கு 3 தவணைகளாக வழங்கப்பட்டுள்ளது.

- Green Services Trust நிறுவனத்தால் கோரப்படும் நிலுவை தொகை வழங்கிட பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களிடமிருந்து ஆணைப் பெறப்படும்பட்சத்தில் மேற்காணும் நிறுவனத்திற்கு நிலுவைத் தொகை வழங்குவது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்காணும் விவரங்கள் தெரிய வருகிறது.

சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2021-22ன் கீழ் பேரூராட்சிக்குட்பட்ட கூகையூரில் உயிரி அகழ்வு முறையில் (Bio-mining) மூலம் 4520 கன மீட்டர் குப்பைகளை ரூ.32.32 இலட்சம் செலவினத்தில் அப்புறப்படுத்திட பேரூராட்சிகளின் இயக்குநரின் 27.07.2022 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் பேரூராட்சிகளின் ஆணையரின் 27.07.2022 நாளிட்ட நிர்வாக அனுமதியின் அடிப்படையில் உரிய ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சியால் கோரப்பட்டு, 19.10.2022 அன்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Green Services Trust, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தமானது பேரூராட்சியால் இறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் 18.10.2022 நாளிட்ட பேரூராட்சிகளின் ஆணையரின் செயல்முறைகள் ஆணையில் ஏற்கனவே 27.07.2022ல் வெளியிடப்பட்ட ரூ.32.32 இலட்சம் மதிப்பீட்டில் குப்பைகளை அகற்றுவதற்கு பதிலாக மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.550 வீதம் 3,616 மெட்ரிக் டன்னுக்கு மொத்தம் ரூ.19.89 இலட்சம் தொகைக்கு திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேரூராட்சி செயல் அலுவலர், பேரூராட்சிகளின் ஆணையரின் 18.10.2022 நாளிட்ட ரூ.19.89 இலட்சம் செலவினத்தில் பணி மேற்கொள்ள வெளியிடப்பட்ட திருத்திய நிர்வாக ஆணையை பரிசீலிக்காமல், ஏற்கனவே 27.07.2022 நாளிட்ட ரூ.32.32 இலட்சம் மதிப்பீட்டில் Green Services Trust என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலரால் 07.12.2022 நாளிட்ட பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்த பணி உத்தரவு அடிப்படையில் அந்நிறுவனமானது ரூ.32.32 இலட்சம் செலவினத்தில் 17.03.2023 முதல் 28.12.2023 முடிய காலத்தில் குப்பைகள் அகற்றப்பட்டன எனவும், இதற்கான தொகை கோரப்பட்டதில் ரூ.19,61,752 மட்டுமே பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ளது எனவும், மீதத் தொகையான ரூ.12,70,248 மற்றும் டேவணித் தொகை ரூ.32,320 மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகை ஆகியவை கடந்த 2 ஆண்டுகளாக பேரூராட்சியால் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதால் 12% வட்டியுடன் வழங்கிட மேற்படி நிறுவனத்தின் சார்பாக மனுதாரர் கோரியுள்ளார்.

இந்நேர்வில் பேரூராட்சிகளின் ஆணையரின் 18.10.2022 நாளிட்ட திருத்திய நிர்வாக செயல்முறைகள் ஆணையின்படி ரூ.19.89 இலட்சம் செலவினத்தில் பணி மேற்கொள்ள புதிய ஒப்பந்தப்புள்ளி கோராமல், 27.07.2022ல் வெளியிடப்பட்ட பேரூராட்சிகளின் ஆணையரின் செயல்முறைகள் ஆணையின்படி ரூ.32.32 இலட்சம் செலவினத்தில் பணி உத்தரவானது சுமார் 2 மாதங்கள் கழித்து 07.12.2022 அன்று மேற்காணும் Green Services Trust நிறுவனத்திற்கு அன்றைய பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்டது தவறான செயலாகும் என பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் நிலையில் பேரூராட்சிகளின் ஆணையரால் வெளியிடப்பட்ட 18.10.2022 நாளிட்ட திருத்திய நிர்வாக அனுமதியான 3,616 மெட்ரிக் டன் குப்பைகளை ரூ.19.89 இலட்சம் செலவினத்தில் அகற்றிடும் பணியினை மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல்

இருந்தது பேரூராட்சி அலுவலர்கள் / பணியாளர்கள் நிர்வாக அலட்சிய போக்குடன் மெத்தனமாக செயல்பட்டு தங்களது கடமையில் தவறியுள்ளனர் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே இதற்கு காரணமான சம்பந்தப்பட்ட பேரூராட்சியின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை பரிந்துரைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் இந்நேர்வில் Green Services Trust நிறுவனம் கோரும் பணி முடிக்கப்பட்டதற்கான நிலுவை தொகை வழங்குவது குறித்து 1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்த சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறப்பட்டுள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதுவதால், இது குறித்து சட்ட ஆலோசகரின் ஆய்ந்த கருத்தினை (considered opinion) பெற்று அதனடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு உத்திரவிடுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் எனவும் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. K. ஸ்ரீராமன்,
   எண்.15/41, பழைய ஸ்டேட் வங்கி காலனி, 2வது தெரு,
   மேற்கு தாம்பரம், கிரீன் சர்வீசஸ் டிரஸ்ட், சென்னை - 45.
2. செயல் அலுவலர்,
   சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி, சேலம் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
   (பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
   சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்